**ஓய்வூதியச் சுற்றறிக்கை இல : 3/2017**

எனது இல : ஓதி/ சுற்றறிக்கை/2017
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
16.10.2017

அனைத்து-
மாவட்டச் செயலாளர்கள்,
மற்றும் பிரதேச செயலாளர்கள்

**ஓய்வூதியர்களுக்கு விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டுகளை வழங்குதல்**

"தாபன விதிக் கோவையின் XVI ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவின் பிரகாரம் ஓர் ஓய்வூதியருக்கான புகையிரத ஆணைச்சீட்டு உரித்து" என்பது தொடர்பில் வெளியிடப்பட்ட 2017.09.21 ஆம் திகதிய 25/2017 அம் இலக்க பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின்பால் தங்கள் மேலான கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. இதற்கமைய, 2017.01.01 ஆம் திகதி முதல் ஓர் ஓய்வூதியருடன் அவரது குடும்ப அங்கத்தவர்கள் மூன்று இரட்டைப்பயண (மூன்று சோடி) புகையிரத ஆணைச்சீட்டிற்கு உரித்துடையவராகின்றனர்.

03. மேற்படி திருத்தத்திற்கமைய என்னால் வெளியிடப்பட்ட 2016.10.21 ஆம் திகதிய 5/2016 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 07 (III) ஆம் பிரிவு பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்படுகிறது.

"ஓய்வூதியருக்கு வருடமொன்றில் முன்று சோடி புகையிரத ஆணைச் சீட்டைப் பெற்றுக்கொள்ளும் உரித்துண்டு. முன்று சோடி எனக் கருதப்படுவது முன்று இருவழிப்பயணங்கள் (போவதற்கும், வருவதற்கும்) அல்லது ஆறு தனி வழிப்பயணங்களாகும். அத்துடன் ஓய்வூதியர்களுக்கு உறங்கல் கூடங்கள், அவதானிப்புக் கூடங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட முன்பதிவு செய்யப்பட்ட இருக்கை வசதிகள் பெற்றுக்கொள்ளும் உரித்தும் உண்டு. ஓய்வூதியர்களில் தங்கி வாழ்வோருக்கும் இவ்வுரித்து கிடைக்கப்பெறும்".

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. ஜனாதிபதி செயலாளர் – த.த.த
2. பிரதமரின் செயலாளர் – த.த.த
3. அமைச்சரவைச் செயலாளர் – த.த.த
4. பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் – த.த.த
5. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் – த.த.த
6. போக்குவரத்து மற்றும் விமானப் பொக்குவரத்து அமைச்சின் செயலாளர் – த.த.த
7. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் – த.த.த
8. இலங்கைப் புகையிரத பொது முகாமையாளர் – த.த.த
9. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த